1990 ஏப்ரல் 20]

களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு விடுகிறது. வேண்டியவர்களுக்குப் படுக்கை கொடுக்கிறீர்கள், வேண்டாதவர்களுக்கு பாயில் கீழே படுக்கச் சொல்கிறீர்கள் என்றெல்லாம் சொல்கிற நிலை ஏற்படுகிறது. ஆகவே, அந்த நோயாளிகளுடைய நலனைக் கருதி அதிக படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதற்கு விரைவில் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இப்போது 30 படுக்கை வசதியுடன் அந்த மருத்துவமனை இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கேயிருக்கிற சமூகநலச் சங்கங்கள், வசதி படைத்தவர்களை அணுகி புதிய கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவார் என்றால், அரசு, நிதிநிலையைக் கருதி படுக்கை வசதி எண்ணிக்கையை அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க நடவடிக்கை.

*5494—திரு. கே. சின்னசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேந்தமங்கலம், புதுசத்திரம், நாமகிரிப்பேட்டை ஆகிய ஒன்றியப் பகுதிகளின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

சேந்தமங்கலம், புதுச்சத்திரம் மற்றும் நாமகிரிப்பேட்டை ஆகிய ஒன்றியப்பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் வாயிலாகக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனை

*6253—திரு. எம். முத்தையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனையை வ.உ.சி. மருத்துவமனை என்று பெயர் சூட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,